**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 65/2022**

2026ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய செல்வி **DW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, L.L.M.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 23.02.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | செல்வி | | |
| Father /Husband Name | : | சின்னபிள்ளை | Court | : |
| Village | : | தில்லையாடி (தற்போது சேலம்) | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 47/2026 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி மற்றும் பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | 02.05.2022 | பிரதிவாதிகளின் தாயார் லெட்சுமியின் இறப்பு சான்றிதழின் அசல் **பிவாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 02.05.2022 | பிரதிவாதிகளின் தந்தை தெட்சிணாமூர்த்தியின் இறப்பு சான்றிதழின் அசல் **பிவாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | 24.06.2022 | மாவட்ட வருவாய் அலுவலர் தரங்கம்பாடி வட்டாட்சியர் அலுவலருக்கு அனுப்பிய குறிப்பாணையின் அசல் **பிவாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | 16.05.2022 | தெட்சிணாமூர்த்தியின் வாரிசு சான்றிதழின் கணினி நகல் **பிவாசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.